**இந்திய உச்ச நீதிமன்றம்**

**முன்னிலை**

**மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.எப்.நரிமன்**

**மற்றும்**

**மாண்புமிகு நீதியரசர் திரு. ரிஷிகேஷ் ராய்**

**2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 02 ஆம் நாள்**

**உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள். 4555-4559 /2021**

**நீரஜ்கார்க்**

**/எதிர்/**

**சரிதா ராணி மற்றும் பலர்**

**கருத்துக்களை நீக்குதல்: வழக்கில் ஒரு தரப்பினருக்காக ஆஜரான வழக்கறிஞருக்கு எதிராக தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் - நீதித்துறை ஒழுக்க நெறி - தீர்மானிக்கப்பட்டது: உயர்நீதிமன்றம் அதனுடைய தீர்ப்புரையில் பதிவு செய்துள்ள குற்றம் சுமத்தும் கருத்துக்கள் வெளிப்படையாகவே அந்த நீதிபதியின் தனிப்பட்ட அனுமானம் என தெரிகிறது - எதிர்மறையான கருத்துக்களை பதிவு செய்ததற்கு முன்பு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விளக்கம் அளிக்க எந்தவித வாய்ப்பும் அளிக்கப்படவில்லை - அவ்வாறு வழக்கறிஞருக்கு எதிராக வாய்ப்பு அளிக்காமல் கண்டனம் தெரிவித்தது இருபுறம் கேள் என்ற கோட்பாட்டிற்கு**

எதிரானது - தேவையான அளவு கட்டுப்பாடு மற்றும் நிதானம், குற்றம் சுமத்தும் கருத்துக்களை வெளிப்படுத்தும் முன் எடுத்துக் கொள்ளவில்லை - அந்த கருத்துக்களும் அந்த இடத்தில் நீதிமன்றத்தில் உள்ள பிரச்சினையை தீர்மானிப்பதற்கு தேவையில்லாதது - வழக்கறிஞரின் நற்பெயர் அல்லது வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினராக அவரது பணிக்கு எதிர்காலத்தில் ஏதேனும் தீங்கு விளைவிப்பதைத் தவிர்ப்பதற்காக ஆட்சேபிக்கத்தக்க கருத்துக்கள் திரும்ப பெறப்பட்டது - அதன் அடிப்படையில் எதிர்மறை கருத்துக்கள் நீக்கப்பட்டன - இயற்கை நீதி கோட்பாடு - இருபுறம் கேள் கோட்பாடு.

**மேல்முறையீடுகள் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது**

தீர்மானிக்கப்பட்டவை: 1. நீதித்துறையின் நிர்வாக வளையத்தில் எந்த அளவுக்கு ஒரு நீதிபதி அவரது அலுவலக பணிகளை சுதந்திரமாகவும் பயம் இல்லாமலும் எந்தவித குறுக்கீடும் இல்லாமல் தீர்மானிப்பதை அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாக அனுமதிக்கிறோமோ அதே அளவு அந்த நீதிபதி வழக்குரைஞரின் மீது வழக்கை தீர்மானிப்பதற்கு சம்பந்தம் இல்லாத குற்றம் சுமத்தும் கருத்துக்களை வெளியிடுவதை தடுப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

2. உயர்நீதிமன்ற தீர்ப்புரையில் பதிவு செய்யப்பட்ட குற்றம் சுமத்தும் கருத்துக்களானது அந்த வழக்கு பிரச்சினைகளை தீர்மானிப்பதற்கு

தேவையில்லாததும் தவிர்க்கப்படவேண்டியதும் ஆகும். மேலும் அது நீதிபதியின் தனிப்பட்ட புரிதலாகவும் உள்ளது தெரிகிறது. அதே போல் எதிர்மறையான கருத்துக்களை பதிவு செய்வதற்கு முன்பு சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டாளருக்கு அவரது பதிலை பதிவு செய்வதற்கு வாய்ப்பு கொடுக்காததும் வெளிப்படையாகவும் தெரியவருகிறது. மேல்முறையீட்டாளருக்கு எதிராக நீதிபதி பதிவு செய்த குற்றம் சுமத்தும் கருத்துக்கள் அது எவ்வாறு பதிவு செய்யப்பட்டதோ அவ்வாறு பதிவு செய்ய கூடாதது ஆகும். மேல்முறையீட்டாளரின் தொழில் நடத்தை குறித்து அவருக்கு பதில் அளிக்க எந்தவித வாய்ப்பும் அளிக்காமல் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அந்த கருத்துக்களும் வழக்கை தீர்மானிப்பதற்கு தேவையில்லாதது ஆகும். அதனால் மேல்முறையீட்டாளரின் நற்பெயர் மற்றும் வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினராக அவரது பணிக்கு பின்னாளில் கலங்கம் ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டி எதிர்மறையான கருத்துக்கள் திரும்ப பெறப்பட்டது. எனவே பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் நீக்கப்பட்டது .

உத்திரபிரதேச மாநிலம் எதிர் முகமது நைம் ஏஐஆர் 1964 எஸ்சி 703: (1964) எஸ்சிஆர் 363; அலோக் குமார் ராய் /எதிர்/ டாக்டர்.எஸ்.என்.சர்மா. (1968) 1 எஸ்சிஆர் 813; ஏ.எம்.மாத்தூர் /எதிர்/பிரோமத்குமார் குப்தா (1990) 2 எஸ்சிசி 533: (1990) 2 எஸ்சிஆர் 110; அபனிகாந்தராய் /எதிர்/ ஒரிசா மாநிலம் (1995) 4 சப்லி எஸ்சிசி 169: (1995) 4 சப்லி எஸ்சிஆர் 333; சம்யாசேட் /எதிர்/ சம்பு சர்கார் மற்றும் ஒருவர் (2005) 6

எஸ்சிசி 767: (2005) 2 சப்லி எஸ்சிஆர் 686; ஏ.என்.பெரரா /எதிர்/ டி.எல்.ஹச். பெரரா மற்றும் பலர் (1982) எஸ்சிசி எஸ்எல் எஸ்சி 20 – சார்வுறப்பட்டது.

**மேற்கோள்காட்டப்பட்ட முன் தீர்ப்புகள்**

| | | |
|---|---|---|
| (1964) எஸ்சிஆர் 363; | சார்வுறப்பட்டது | பத்தி 9 |
| (1968) 1 எஸ்சிஆர் 813; | சார்வுறப்பட்டது | பத்தி 10 |
| (1990) 2 எஸ்சிஆர் 110; | சார்வுறப்பட்டது | பத்தி 11 |
| (1995) 4 சப்லி எஸ்சிஆர் 333; | சார்வுறப்பட்டது | பத்தி 12 |
| (2005) 2 சப்லி எஸ்சிஆர் 686; | சார்வுறப்பட்டது | பத்தி 13 |
| (1982) எஸ்சிசி எஸ்எல் எஸ்சி 20 | சார்வுறப்பட்டது | பத்தி 14 |

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள். 4555-4559/2021.

நைனிடாலில் உள்ள உத்தரகண்ட் உயர்நீதிமன்றத்தின் 14.11.2017, 22.11.2019, 12.03.2020 மற்றும் 22.02.2021 தேதியிட்ட நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண். 2216/2017 மற்றும் நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண்.2208/2017, இரண்டாவது மேல்முறையீடு எண்.190/2019, இரண்டாவது மேல்முறையீடு எண்.182/2019 மற்றும் நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண்.519/2019 முறையே தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்கள், முகுல் ரொக்தாகி, கிருஷ்ணன் வேணுகோபால், அமர்தேவ் (நீதிமன்ற நடுநிலையாளர்) மூத்த வழக்கறிஞர்கள், கௌரவ் அகர்வால், ராகுல் பிரதாப், சிவேந்திரசிங்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்பை வழங்கியவர் மாண்புமிகு நீதியரசர் திரு. ரிஷிகேஷ் ராய் அவர்கள்.

1. அனுமதி அளிக்கப்பட்டது. இந்த மேல் முறையீட்டாளர் உத்தரகாண்ட் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். அவர் 17 வருடங்களுக்கு மேல் வழக்கறிஞர் சங்கத்தில் உரிப்பினராக இருந்து வருகிறார். இந்த மேல்முறையீடானது உயர்நீதிமன்ற நீதிபதி இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக தெரிவித்த எதிர்மறையான கருத்துக்களை வெளியேற்றம் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்ட 4 வழக்குகளில் ஒரு தரப்பினருக்கு ஆதரவாக இந்த மேல்முறையீட்டாளர் ஆஜராகி உள்ளார். பின்வரும் உத்தரவு மற்றும் நடவடிக்கைகள் சம்பந்தமாக மட்டும் இந்த நீதிமன்றம் விசாரணை செய்கிறது.

"நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண். 2216/2017 மற்றும் நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண். 2208/2017, விரவாலிமங்கா /எதிர்/ சரிதாராணி, இரண்டாவது மேல்முறையீடு எண். 190/2019

லேண்டோர் கம்யூனிட்டி ஹாஸ்பிடல் /எதிர்/ சந்திப் பிஷ்னோயி.

இரண்டாவது மேல்முறையீடு எண். 182/2019 வினோத்குமார் /எதிர்/ மந்தீர்லட்சுமி, நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண். 519/2019 பாரூல்பிரகாஷ் /எதிர்/ அணில்பிரகாஷ்"

2. இந்த நீதிமன்றம் 02.07.2021 அன்று அறிவிப்பு அனுப்பி வழக்கறிஞர் திரு.அமர்தேவை நீதிமன்ற நடுநிலையாளராக நீதிமன்றத்திற்கு உதவ நியமிக்கப்பட்டு அவர் பரிந்துரைகளை அளித்துள்ளார். அலுவலக அறிக்கைப்படி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேல்முறையீட்டாளர் எந்தவித நிவாரணமும் கோராமல் தீர்ப்புரையில் நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண். 2216/2017 மற்றும் நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண். 2208/2017,சொல்லப்பட்டுள்ள எதிர்மறை கருத்துக்களை மட்டும் நீக்கம் செய்யவேண்டி இந்த மனு தாக்கல் செய்துள்ளதால் 13.07.2021 ம் தேதியிட்ட கடிதத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள் சம்பிரதாய தரப்பினர்களாக மட்டும் சேர்க்கப்பட்டுள்ளதாக கருதி வழக்கு நடத்தப்பட்டது.

3. மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு.முகுல் ரொக்தாகி அவரது வாதத்தின் போது மேல்முறையீட்டாளர் நல்ல முறையில் பல வழக்குகளில் உத்தரகாண்ட் உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்து ஆஜராகி வருகிறார் என்றும் அவருக்கு எதிராக தீர்ப்பில் சொல்லப்பட்ட எதிர்மறையான கருத்துக்களானது சம்பந்தப்பட்ட நபரிடம் எந்தவித பதிலும் கேட்காமல் பதிவு செய்யப்பட்டுள்ளது

என்றும் அது வழக்கை தீர்மானிப்பதற்கு முக்கியமானதோ அல்லது தேவையான ஒன்றோ இல்லை என்றும் எடுத்துரைத்துள்ளார். மேலும் இதுபோன்ற எதிர்மறையான விமர்சனம் வழக்கறிஞரின் தனிப்பட்ட தொழிலுக்கு கலங்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் அவரது பல வருட வழக்கறிஞர் தொழிலிலும் பிரதிபலிக்கும் என எடுத்துரைத்துள்ளார்.

4. கற்றறிந்த நீதிமன்ற நடுநிலையாளரான திரு.அமர்தேவ் அவர்கள் மூத்த வழக்கறிஞர் திரு.முகுல்ரொக்தாகி உடன் சேர்ந்து உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண். 2216/2017 மற்றும் நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண். 2208/2017, நாள் 14.11.2017 ஆகியவற்றில் சேர்ந்து பிறப்பித்த தீர்ப்பில் அந்த வழக்கின் ஒரு தரப்பினருக்கு ஆஜரான இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக சொல்லப்பட்ட கருத்துக்கள் குறித்து இந்த நீதிமன்றத்தின் கவனத்துக்கு சில விஷயங்களை எடுத்துவந்துள்ளார். அவை

" **** **** ****

> 16. ஒரு ஆவணத்தின் ஒரு பகுதியை மட்டும் சமர்பித்து அதன் அடிப்படையில் இடைக்கால உத்தரவு பெறுவதற்கு வேண்டி உண்மையான சங்கதிகளை மறைத்ததற்காக தான் மிகுந்த வேதனை அடைவதாகவும் சம்பந்தப்பட்ட மனுதாரரின் வழக்கறிஞர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தன்னைத்தானே வேண்டாமென மிகுந்த சிரமத்துடன் தவிர்க்கிறேன்.

17. மனுதாரர் அவ்வப்போது நீதிமன்றத்திற்கு வந்து வழக்கு நடத்தினாலும் இந்த நீதித்துறை மற்றும் அதன் சகோதரத்துவத்திற்கு கலங்கம் ஏற்படுத்தாமல் இருக்கக்கூடிய கடமை இருந்த போதிலும், வேண்டும் என்றே புனிதமான அமைப்பிற்கு கலங்கம் ஏற்படுத்தி தீய உதாரணமாக இருந்துள்ளார்.

**** **** **** ,,

5. அதே போல் இரண்டாவது தீர்ப்புரை வழங்கிய இரண்டாவது மேல்முறையீடு எண்.190/2019 என்ற வழக்கிலும் நீதிபதி அவரது கருத்துக்களை கடந்த 22.11.2019 அன்று பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

,, **** **** ****

2. இந்த இரண்டாவது மேல்முறையீடு தொடங்கி சிறிது நேரம் சென்ற பிறகும் மேல்முறையீட்டாளரது வாதமானது மலையை குடைந்து ஓட்டை போடுவதற்கு முயற்சி செய்தது போல் இருந்ததால் அது சம்பந்தப்பட்ட தேதியில் விசாரணைக்காக நிலுவையில் இருக்கும் மற்ற வழக்காடிகளின் பொன்னான நேரத்தை கொடுரமாக படுகொலை செய்வதற்கு சமமானது என இந்த நீதிமன்றம் எந்தவித தயக்கமும் இல்லாமல் கருதுகிறது.

மேலும் இது வழக்கிற்கான வாதுரை போல் இல்லாமல் பார்வையாளர்களின் மடம்போல் உள்ளது.

**** **** **** ,,

6. அதே போல் கடந்த 12.03.2020 அன்று, மூன்றாவது தீர்ப்புரை வழங்கிய இரண்டாவது மேல்முறையீடு எண். 182/2019 என்ற வழக்கிலும் நீதிபதி வழக்குரைஞரின் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை குறித்து பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

,, **** **** ****

வழக்கை விசாரணைக்கு ஏற்கும் நிலையில் உள்ள இரண்டாவது மேல்முறையீட்டில் வாதுரையை தவிர்ப்பதற்கு வேண்டி மேல்முறையீட்டு வழக்கறிஞர் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண். 604/2009, ஸ்ரீவினோத்கோயல் /எதிர்/ ஸ்ரீசுசி /சபர்வால் மற்றும் ஒருவர் என்ற சம்பந்தமில்லாத வழக்கு நடைமுறைகள் குறித்து மேல்முறையீட்டிற்காக முழு நில வாதுரையை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கினை அதன் தகுதியின் அடிப்படையில் தீர்மானிப்பதை தவிர்ப்பதற்கு முயற்சி செய்துள்ளார்.

**** **** **** ,,

7. அதே போல் நான்காவது வழக்கான தீர்ப்புரை வழங்கிய நீதிப்பேராணை மனு (எம்/எஸ்) எண். 519/2019 என்ற வழக்கிலும் நீதிபதி வழக்குரைஞருக்கு எதிராக அவரது மகிழ்ச்சியின்மையை கடந்த 22.02.2021 அன்று பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

" **** **** ****

2. இந்த நீதிமன்றம் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர் மீது கருத்துக்களை பதிவு செய்ய தவிர்த்து வந்த நிலையிலும் வேண்டும் என்றே முழுமனதுடன் தீய எண்ணம் கொண்டு தொடர்ச்சியாக பெருவாரியான வழக்குகளில் இந்த நீதிமன்றத்தை தவறான வழிக்கு அழைத்து செல்வதும் அதன் மூலம் வழக்கின் உண்மை தன்மை பாதிப்படைந்து நீதி வழங்குவதில் சிரமத்தை ஏற்படுத்தியும் நீதிப்பேராணை மனுக்களில் அது விசாரணைக்கு ஏற்கப்படும் தேதியிலேயே வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத பல்வேறு தீர்ப்புக்களை பல பக்கங்களுக்கு எடுத்து வந்து அதை நீதிப்பேராணை மனுவோடு சேர்த்து தாக்கல் செய்வதும், சரத்து 227 இந்திய அரசமைப்பு சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யும் மனுக்களிலும் இதே போல் தீர்ப்புரைகளை வழங்கி வருவதால் இந்த நீதிமன்றம் சில கருத்துக்களை மனுதாரர் வழக்கறிஞருக்கு எதிராக பதிவு செய்கிறது.

3. இது ஒரு தெளிவான மற்றும் நிலையான உத்தியாகவும், மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞரால் பின்பற்றப்பட்ட ஒரு தந்திரமாகவும் உள்ளது, நீதிப்பேராணை மனுவில் ஏராளமான பதிவுகளை வைப்பதன் மூலம், முன்னுதாரணங்கள் / தீர்ப்புகளின் நகல்கள் உட்பட, மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் நம்பியிருக்கிறார், இந்த உடனடி வழக்கில் சுமார் 20 தீர்ப்புகள் உள்ளன, 1972 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 21 (1) (அ) இன் கீழ் நடைபெற்ற சுருக்க நடவடிக்கைகளில் இரு நீதிமன்றங்களாலும் பதிவு செய்யப்பட்ட உண்மைகளின் சமகால கண்டறிதலுக்கு எதிராக, மனுதாரரின் சட்டத்தரணி தனது வழக்குக்கு ஆதரவாக நம்பியிருப்பதாக வாதிடுகிறார். இனிமேல் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, நம்பியிருக்கும் பெரும்பாலான தீர்ப்புகள் கூட வழக்கைப் பரிசீலிக்கும் நோக்கங்களுக்காகக் கூட பொருத்தமற்றவை என்றும், தற்போதைய வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் அவை கூட பொருந்தாது என்றும் வெளிப்படையாக ஊகிக்க முடியும்.

4. இந்த மாதிரியான அணுகுமுறையை மனுதாரர் தொழிலில் ஒரு தந்திரமாக தொடர்ந்து நீதிப்பேராணை மனுக்களை விசாரணைக்கு எடுக்கும் போது செய்வது நேரமின்மை

காரணமாக மனுக்களை அனுமதிக்க முடியாமலும் ஒரே நேரங்களில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரைகளில் இருந்து வரக்கூடிய மேல்முறையீட்டுக்களையும் வாடகை கட்டுப்பாட்டாளர் தீர்ப்பாய சுருக்க வழக்கு மேல்முறையீடுகளையும் விசாரிக்க முடியாமல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இடைக்காலமாக வழங்கப்படக்கூடிய நிவாரணங்கள் தவிர்க்க முடியாததாக போய்விடுகிறது. மேலும் இதுபோல் செய்வதும் வழக்காடிகளின் வழக்கு செலவை அதிகப்படுத்துவதால் இது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட முன் உதாரணமாக இல்லாமல் சாதாரண வாடிக்கையாக வழக்கறிஞரால் அவரது அலுவலகத்தில் வைத்து தொடங்கப்பட்டு பல வழக்குகளிலும் தொடர் கதையாகி வருகிறது. இதுபோன்ற வழிமுறைகளானது இந்நீதிமன்ற தீர்ப்பானது மேல்முறையீட்டுக்கு சென்றால் வழக்கறிஞர் மேற்கோள் காட்டிய தீர்ப்புகள் கருத்தில் கொள்ளப்படவில்லை என்ற நோக்கில் உயர்நீதிமன்ற தீர்ப்பை நீர்த்துபோக செய்துவிடலாம் என்ற முன் அறிவிப்போடும் உயர்நீதிமன்றம் அதன் அறிவை முறையாக பயன்படுத்தவில்லை என எடுத்துச் சென்றுவிடலாம் என்ற எண்ணத்தில் வேண்டும் என்றே மனுதாரரின் வழக்கறிஞர் செயல்பட்டுள்ளார்.

52. இந்த நீதிமன்றம் பரிந்துரைக்கப்பட்ட முன்தீர்ப்புகளை குறித்து காட்டுவதற்கு முன்பு தகுதியின் அடிப்படையில் ஏற்கனவே பத்தி 2,3,4 ல் சொல்லப்பட்டுள்ளது போல் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்த தொடர்பில்லாத முன் தீர்ப்பு, இந்தவழக்கு சங்கதிகள் மற்றும் சூழ்நிலையை சார்ந்திராத தீர்ப்புகள், மற்றும் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத முன்தீர்ப்புகள் ஆகியவைகளில் அதன் முக்கியப்பகுதியை மட்டும் குறித்துக் காட்டி இந்த நீதிமன்றத்தை தவறான வழிக்கு கொண்டு செல்வதற்காகவும் இந்த நீதிமன்றத்தின் நேரத்தை நீட்டித்தும் நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்படுவதிலிருந்து வெளியே வருவதற்காக தொடர்ச்சியாக செய்யப்பட்ட ஒருவிதமான செய்முறை.

**** **** ****"

8. மேல்முறையீட்டாளர் தனது வாதத்தில், உயர் நீதிமன்றம் வழக்கறிஞர் நடத்தைக் குறித்து எடுத்துரைத்த நீதித்துறை உத்தரவுகள் பிரச்சினைக்குரிய வழக்கை தீர்மானிப்பதற்கு தேவையில்லாதது ஆகும். எந்தவொரு வழக்கிலும் சம்பந்தப்பட்ட வழக்கறிஞருக்கு அறிவிப்பு அனுப்பாமல் கருத்துக்களை இதுபோல் பதிவு செய்ய முடியாது. மேற்படி கருத்துக்களால் மேல்முறையீட்டாளர் கடினமாக உழைத்து வாங்கிய பெயருக்கு கலங்கம் ஏற்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர்

இதுபோல் ஒரு குற்ற எதிர்மறையான கருத்துக்களை தனது தொழில் வரலாற்றில் எந்தவொரு உயர்நீதிமன்ற நீதிபதியாலும் பதிவு செய்யப்படவில்லை. மேலும் வழக்கறிஞர் ரோஹத்கி தனது வாதுரையில் சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதி 19.05.2017 ல் நீதிபதியாக தேர்வு செய்யப்படும் முன் அதே வழக்கறிஞர் சங்கத்தில் வழக்கறிஞராக பணியாற்றி இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக பல வழக்குகளையும் நடத்தியதில் ஏற்பட்ட தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக தான் இதுபோல் கருத்துக்களை பதிவு செய்துள்ளார் என்றும் அவை தேவையில்லாதது என்றும் வெளிப்படுத்தியுள்ளார். அதன்படி, சம்பந்தப்பட்ட நீதிபதி தனது தரப்பினர் சார்பாக வழக்கறிஞர் எடுக்கும் முயற்சிகளை பாராட்டாமல் இருப்பதால், மேல்முறையீட்டாளர் ஒரு வழக்கறிஞராக தனது நடத்தை குறித்து பாதகமான கருத்துக்களை அனுபவிக்கக்கூடாது என்று வாதிடப்படுகிறது.

9. மேலும் இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிரான கருத்துக்கள் முகாந்திரம் இல்லாதது என்றும் அவை உத்திரபிரதேசம் மாநிலம் /எதிர்/ முகமது நைம் ஏஐஆர் 1964 எஸ்சி 703 என்ற தீர்ப்பில் நீதியரசர் எஸ்.கே.தாஸ் பரிந்துரைத்த 3 நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரவில்லை என்றும் அவ்வாறு வந்தால் தான் இதுபோன்ற எதிர்மறையான கருத்துக்களை பதிவிட முடியும் என்றும் எடுத்துரைத்துள்ளார். அந்த நிபந்தனைகள்:

A. யாருக்கு எதிராக கருத்து பதிவிடப்பட்டதோ அவருக்கு அதை மறுத்து பதிலளிக்க வாய்ப்பு வழங்கப்பட்டதா;

B. அந்த கருத்துக்களுக்கு ஆதரவாக ஏதேனும் சாட்சியம் பதிவில் உள்ளதா; மற்றும்

C. அவ்வாறு சொல்லப்படும் எதிர்மறை கருத்துக்கள் வழக்கினை தீர்மானிப்பதற்கு ஒரு பகுதியாக உள்ளதா;

10. அலோக்குமார் ராய் /எதிர்/ டாக்டர்.எஸ்.என்.சர்மா (1968) 1 எஸ்சிஆர் 813 வழக்கில் 5 நீதிபதிகள் அமர்வில் நீதியரசர் சி.கே.வான்சூ என்பவர் நியாயமான விமர்சனங்கள் தேவையான போதிலும் அவற்றை மிகுந்த கவனத்தோடு சரியான மொழி நடையில் வெளிப்படுத்த வேண்டும் என எடுத்துரைத்துள்ளார். வழக்கறிஞரின் நடத்தையை நிராகரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய வார்த்தைகள் முறையானதாக இல்லை என்றால் அது சரியான நிதானமான செயலாக அமையாது.

11. ஏ.எம்.மாத்தூர் /எதிர்/ பிரமோத் குமார் குப்தா (1990) 2 எஸ்சிசி 533 என்ற வழக்கில் நீதியரசர் ஜெகநாத செட்டி தனது தீர்ப்பில் எதிர்மறையான கருத்துக்களை தவிர்க்க வேண்டும் என பின்வருமாறு கூறியுள்ளார்,

"13.... ஒரு நீதிபதிக்கு பணியில் நிதானமும் பணிவும் முக்கிய நிலையான அங்கமாகும். இந்த பண்பானது வழக்கை தீர்மானிக்கக்கூடிய ஒரு நீதிபதிக்கு மரியாதையையும் தனித்துவமான நீதித்துறையை பாதுகாப்பதற்கும் சிறந்த தரமாகும்.

பணியில் நிதானமானது நீதித்துறைக்கு மரியாதை மட்டும் அல்லாது மொத்த நீதித்துறைக்கும் பெருமை...''

12. தேவையில்லாத எதிர்மறை கருத்துக்களை உத்தரவில் தவிர்ப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அது நீதிப்பரிபாலனத்திற்கும் நீதித்துறைக்கும் எந்த அளவும் முக்கியமானதும் என அபானிகாந்தாராய் /எதிர்/ ஒரிஷா மாநிலம் 1995 சப்லி (4) எஸ்சிசி 169 என்ற வழக்கில் நீதியரசர் ஜே.எஸ்.வர்மா பின்வருமாறு கூறியுள்ளார்.

''ஒரு வழக்கை தீர்மானிப்பதற்கு தேவையில்லை எனில் ஒருவருக்கு எதிராக தேவையில்லாத எதிர்மறையான கருத்துக்களை கன்னியம் குறைந்த மொழியில் எழுதுவதும் நீதித்துறை பழக்கவழக்கத்திற்கு முரணானது. ஒரு நீதிமன்ற உத்தரவில் கருத்துக்களை பதிவு செய்தால் அது என்றுமே அழியாத எழுதப்பட்ட உத்தரவாக ஆகிவிடும் என்பதால் நீதித்துறை அதிகாரத்தை பயன்படுத்தும்போது சுயகட்டுப்பாடுடன் இருக்கவேண்டும்''

13.மேலே சொல்லப்பட்ட நெறிமுறைகள் அனைத்தும் இந்த நீதிமன்றத்தால் பின்வரும் பல்வேறு தீர்ப்புகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சம்யாஷேட் /எதிர்/ சம்புசர்கார் மற்றும் ஒருவர் (2005) 6 எஸ்சிசி 767 என்ற வழக்கில் 3 நீதிபதிகள்

அமர்வில் நீதியரசர் சி.கே.தாக்கர், தனது தீர்ப்பில் எதிர்மறையான கருத்துக்கள் வழக்கை தீர்ப்பதற்கு தேவையானதாகவோ தீர்ப்பின் ஒரு அங்கமாகவோ இல்லாமல் இருப்பதால் அவை நீக்கப்படுவதாக எடுத்துரைத்துள்ளார்.

14. மேலும் நீதியரசர் எஸ்.கே.தாஸ் 4 நீதிபதிகள் அமர்வில் முகமது நைம் (மேலே) வழக்கில் எதிர்மறையான கருத்துக்கள் 1964 ல் இருந்து கேட்டினா தீர்ப்புகளில் அனுமதிக்கப்பட்டுள்ளது என எடுத்துரைத்துள்ளார். மேலும் ஸ்ரீலங்கன் உச்சநீதிமன்றத்தில் ஏ.என்.பெரரா /எதிர்/ டி.எல்.ஹச்.பெரரா மற்றும் பலர் 1982 எஸ்சிசி எஸ்எல் எஸ்சி 20 வழக்கில் நீதியரசர் அப்துல்காதிர் தனது தீர்ப்பில் மனுதாரருக்கு எதிராக நீதிபதி பிறப்பித்த கருத்துக்கள் அனைத்தும் தேவையில்லாதது என முடிவுக்கு வந்துள்ளார்.

15. நீதித்துறையின் நிர்வாக வளையத்தில் எந்த அளவுக்கு ஒரு நீதிபதி அவரது அலுவலக பணிகளை சுதந்திரமாகவும் பயம் இல்லாமலும் எந்தவித குறுக்கீடும் இல்லாமல் தீர்மானிப்பதை அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாக அனுமதிக்கிறோமோ அதே அளவு அந்த நீதிபதி வழக்கு நடத்தும் தரப்பினர் மீது வழக்கை தீர்மானிப்பதற்கு சம்பந்தம் இல்லாத குற்றம் சுமத்தும் கருத்துக்களை வெளியிடுவதை தடுப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

16. உயர்நீதிமன்ற தீர்ப்புரையில் பதிவு செய்யப்பட்ட குற்றம் சுமத்தும் கருத்துக்களானது அந்த வழக்கு பிரச்சினைகளை தீர்மானிப்பதற்கு தேவையில்லாததும் தவிர்க்கப்படவேண்டியதும் ஆகும். மேலும் அது நீதிபதியின் தனிப்பட்ட புரிதலாகவும் உள்ளது தெரிகிறது. அதே போல் எதிர்மறையான கருத்துக்களை பதிவு செய்வதற்கு முன்பு சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டாளருக்கு அவரது பதிலை பதிவு செய்வதற்கு வாய்ப்பு கொடுக்காததும் வெளிப்படையாகவும் தெரியவருகிறது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் மேல்முறையீட்டாளரின் தொழில்முறை நேர்மையின் மீது களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன. வழக்குரைஞரைக் கேட்க வாய்ப்பளிக்காமல் அவரைக் கண்டிப்பது, மற்ற தரப்பினரைக் கேட்கவேண்டும் என்ற கோட்பாட்டை மறுப்பதாகும். இதுபோன்ற சூழ்நிலைகளில் எதிர்பார்க்கப்படும் கட்டுப்பாடு மற்றும் நிதானத்தின் அளவு குற்றம் சுமத்தும் கருத்துக்களில் காணப்படவில்லை.

17. இந்த மேல்முறையீட்டாளருக்கு பதிவு செய்யப்பட்ட எதிர்மறையான கருத்துக்கள் அவரது உடன்பணியாற்றும் வழக்கறிஞர்களுக்கு இடையே இழிவாக மட்டும் இல்லாமல் அவரது மொத்த தொழிலையே பாதிக்கக்கூடியதாக இருக்கும். மேல்முறையீட்டாளருக்கு எதிரான கருத்துக்கள் தீர்ப்பிலிருந்து வெளியேற்றப்படவில்லை என்றால் அவரது வாழ்க்கை முழுவதும் ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்படும். அவ்வாறு மேல்முறையீட்டாளரை பாதிப்படையச் செய்வது பாரபட்சமானதாகவும் நியாயமில்லாததும் ஆகும்.

18. மேலே விவாதித்தது போல் தாங்கள் பின்வருமாறு கருதுகிறோம். கற்றறிந்த நீதிபதி மேல்முறையீட்டாளருக்கு எதிராக குறிப்பிட்டுள்ள குற்றம் சுமத்தும் கருத்துக்கள் அவர் பதிவு செய்துள்ளது போல் பதிவு செய்திருக்கக்கூடாது. எதிர்மறையான கருத்துக்களை பதிவு செய்ததற்கு முன்பு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விளக்கம் அளிக்க எந்தவித வாய்ப்பும் அளிக்கப்படவில்லை. அந்த கருத்துக்களும் சம்பந்தப்பட்ட வழக்கை தீர்மானிப்பதற்கு தேவையில்லாத ஒன்றாகும். வழக்கறிஞரின் பெயர் மற்றும் வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினராக அவரது பணிக்கு பின்னாளில் கலங்கம் ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டி எதிர்மறையான கருத்துக்கள் திரும்ப பெறப்பட்டது. அதன் அடிப்படையில் எதிர்மறை கருத்துக்கள் சொல்லப்பட்ட பத்தி 4,5,6 மற்றும் 7 ஆகியவைகள் தீர்ப்பில் இருந்து இதன் மூலம் நீக்கம் செய்வதாக உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட உத்தரவின் படி மேல்முறையீடுகள் முடித்து வைக்கப்படுகிறது.

மேல்முறையீடுகள் முடித்து வைக்கப்பட்டது.

## பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திகொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".